# பின்னணித் தகவல் ஆவணம்

அட்டர்னி ஜெனரல்
அமைச்சகம்

26 ஏப்ரல், 2006

## ஒன்டாரியோ மனித உரிமைகள் அமைப்பை வலுப்படுத்தல்

ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையம் (Ontario Human Rights Commission) மற்றும் ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயம் (Human Rights Tribunal of Ontario) ஆகியவற்றை உள்ளடக்கிய தற்போதைய மனித உரிமைகள் அமைப்பானது, கனடாவிலேயே முதல் மனித உரிமைச் சட்டமாக இந்த மாகாணம் 1962 இல் ஏற்றுக் கொண்டது முதல் நடப்பில் உள்ளது. இந்தச் சட்டம் மாகாணத்தில் உள்ள ஒவ்வொருவரையும் அவர்தம் பணியிடங்கள், குடியிருப்புகள், பொருட்கள், சேவைகள் மற்றும் வசதிகளில் பாகுபாடு மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது.

### மனித உரிமைகள் அமைப்பை நவீனப்படுத்துவதில் முன்னிலை வகிக்கிறது ஒன்டாரியோ

மெக்கின்டி அரசு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது; இது நிறைவேறினால், புகார்களை மேலும் விரைவாக, பயனுள்ள வகையில் தீர்ப்பதற்கும், நவீன மனித உரிமைப் பிரச்சினைகளை சிறப்பாக சமாளிப்பதிலும் ஒன்டாரியோவின் 40-ஆண்டுகால பழமையான மனித உரிமைகள் அமைப்பை நவீனப்படுத்துவதாக அமையும்.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக மனித உரிமைகள் சீர்திருத்தம் ஒன்டாரியோவில் விவாதிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் அட்டர்னி ஜெனரல் அமைச்சகம் பல்வேறு மனித உரிமைக் குழுக்கள் மற்றும் சமூகக் குழுக்களுடன் ஆலோசனை நடத்தியது. கார்னிஷ் அறிக்கை உள்பட பல்வேறு அறிக்கைகளின் பரிந்துரைகளுக்கு ஏற்ப உத்தேசிக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்கள், இந்தப் பகுதியில் பொதுமக்களுக்கான சேவையை மேம்படுத்தும், மனித உரிமைகளை முன்னெடுத்துச் செல்லும்.

வழக்கறிஞரும், சர்வதேச அளவில் மனித உரிமைகள் விஷயத்தில் வல்லுநராக இருப்பவருமான கார்னிஷ் (Cornish) அவர்களால் 1992ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட கார்னிஷ் அறிக்கை, ஒன்டாரியோ மனித உரிமைகள் சட்டத்தின்கீழ் (Ontario Human Rights Code) மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தும் செயல்பாடுகளை பரிசீலனை செய்தது. புகார் அளிக்க விரும்புவோர் மனித உரிமைகள் தீர்ப்பாயத்திடம் நேரடியாக புகார்களை பதிவு செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை பரிந்துரை செய்தது. ஆணையத்தின் முக்கியச் செயல்பாடு, மனித உரிமைகள் பற்றிய கல்வி மற்றும் ஆய்வு நடத்துவதும், அமைப்புரீதியான பாகுபாடுகளில் கவனம் செலுத்துவதாகவும் இருக்க வேண்டும் என்று கூறியது.

உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய மனித உரிமைகள் அமைப்பு கீழ்க்கண்டவாறு பரிந்துரைகளைப் பின்பற்றும், பாகுபாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்கும்:

- செயல்முனைப்பு நடவடிக்கைகளின் மூலம் பாகுபாடுகளைத் தடுப்பதிலும், மக்கள் கல்வி, ஆய்வு, மதிப்பீடு செய்தல் மற்றும் பாகுபாடுகளைத் தடுத்தல் ஆகியவற்றிலும் ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையம் கவனம் செலுத்தும். சமூகங்கள் மற்றும் குழுக்களின்மீது பரவலான தாக்கம் செலுத்தக்கூடிய அமைப்புரீதியான பிரச்சினைகளை கவனித்து அவற்றைத் தீர்ப்பதில் ஆணையம் பணியாற்றுதல்

- ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையத்துக்கு உள்ளேயே இனவாத எதிர்ப்பு செயலகம் மற்றும் ஊனமுற்றோருக்கான உரிமைகள் செயலகம் ஆகிய இரண்டு புதிய செயலகங்களை உருவாக்குதல்

- புகார் விண்ணப்பங்களை மனித உரிமைகள் தீர்ப்பாயத்திடம் நேரடியாக அளிக்கச் செய்வதன் மூலம் மேலும் வெளிப்படையான, எளிதில் அணுகக்கூடிய, விரைவில் தீர்வு காணக்கூடிய வகையில் நடைமுறைப்படுத்துவது. தன்னிடம் உள்ள பிரச்சினைகளை திறமையாகவும் பயனுள்ள வகையில் தீர்ப்பதற்கும், தகராறுகளைத் தீர்ப்பதற்கான மாற்று அமைப்புகளை வழங்கவும் தேவையான பயிற்சிகள் மற்றும் நடைமுறைகளை வகுத்துக்கொள்ள தீர்ப்பாயத்துக்கு கூடுதல் அதிகாரம் இருக்கும்.

- புதிதாக மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம் (Human Rights Legal Support Centre) ஒன்றை உருவாக்குதல்.

**ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையத்தின் தற்போதைய பங்கு**

மெக்கின்டி அரசு, 2005 நவம்பரில் பார்பரா ஹால் அவர்களை மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக நியமித்தது.

ஆணையம், அட்டர்னி ஜெனரலின் வாயிலாக மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்புடைய சுயேச்சை அமைப்பாகும். ஆணையத்தின் முக்கியப் பணி, புகார்களைப் பெற்று அவற்றின்மீது நடவடிக்கை எடுப்பது. ஒவ்வொரு ஆண்டும் ஆணையத்திடம் பதிவு செய்யப்படும் புகார்களின் சராசரி எண்ணிக்கை 2,500. இருதரப்பிடமும் விசாரித்து, ஆணையம் உண்மை கண்டறியும் நடவடிக்கையையும் முடித்த பிறகு, வழக்கு ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் முன் கொண்டுசெல்லப்பட வேண்டுமா என ஆணையம் முடிவு செய்கிறது. இதற்கு சுமார் ஐந்து ஆண்டுகள் வரை ஆகிறது; புகார் விண்ணப்பதாரர்களுக்கு இந்தக் காலத்தில் எந்தவித சட்ட உதவியும் கிடைப்பதில்லை.

ஆணையத்தின் கொள்கைப் பணிகள், குறிப்பிடத்தக்க மனித உரிமைப் பிரச்சினைகளின்மீது ஆய்வு மற்றும் மேம்பாட்டு வழிகாட்டல்கள் ஆகியவற்றுக்காக ஆணையம் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளது. இதன் அண்மை வெளியீடுகளில் இனவாதச் சுருக்கவுரை, வயதின் அடிப்படையில் பாகுபாடு, கட்டாய ஓய்வு ஆகியவை பற்றிய அறிக்கைகளும், குழும உணவகங்களில் அனுமதி தொடர்பான தணிக்கையும் அடங்கும்.

**ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் தற்போதைய பங்கு**

மெக்கின்டி அரசு, 2005 ஏப்ரலில் புகழ் பெற்ற மனித உரிமைகள் வழக்குரைஞர் மைக்கேல் கோத்தெய்ல் அவர்களை ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் தலைவராக நியமித்தது.

இத்தீர்ப்பாயம் சுதந்திரமான, பகுதி-நீதித்துறை அமைப்பாகும்; பாகுபாடுகள் மற்றும் துன்புறுத்தல்கள் மீதான புகார்களை சட்டத்தின்படி விசாரித்து முடிவு செய்கிறது. ஆணையத்தால் பரிந்துரைக்கப்படும் புகார்களை மட்டுமே இது விசாரிக்க முடியும். புகார்களைப் பரிசீலித்து, அதன்மீது முடிவு செய்வது இதன் பொறுப்பாகும். ஆணையம் ஆண்டுக்கு சுமார் 100 வழக்குகளை தீர்ப்பாயத்துக்கு அனுப்புகிறது.

முழு விசாரணையும் முடிவடைந்து பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு தற்போது நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் வரை ஆகிறது. இந்தச் செயல்பாட்டில் புகாரை எடுத்துக்கொள்ளுதல், விசாரணைக்கு விடுதல், விசாரணை செய்தல், சுமுக முடிவுக்கான பேச்சுவார்த்தைகள், தீர்ப்பாயத்துக்கு அனுப்ப வேண்டுமா அல்லது தேவையில்லையா என முடிவு செய்தல், தீர்ப்பாயத்தின் விசாரணை, இறுதி முடிவு ஆகியவையும் அடங்கும். ஆணையம் மற்றும் தீர்ப்பாயத்தின் அமைப்பில் உள்ள நடைமுறை காரணமாக இரண்டு இடங்களிலும் விசாரிக்கப்படுவதால் தாமதம் ஆகிறது.

**உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையம்**

உத்தேசிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் சட்டத் திருத்தச் சட்டம் 2006இன்படி, ஆணையத்தின் பணியானது ஒன்டாரியோவில் அமைப்புரீதியான பாகுபாடுகளை நீக்குவதற்காக மக்கள் கல்வி, மேம்பாடு மற்றும் ஆதரவு, ஆய்வு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் செயல்முனைப்பு நடவடிக்கைகளின்பால் கவனம் செலுத்துவதாக அமையும்.

ஒரு புகாரை தன் சார்பில் முத்தரப்பாயத்திடம் நேரடியாகப் பதிவு செய்ய, அல்லது பொது நலத்தைப் பாதிக்கக்கூடிய அமைப்புரீதியான பிரச்சினைகள் இருந்தால், பிற வழக்குகளில் தலையிடும் அதிகாரத்தையும் ஆணையம் கொண்டிருக்கும்.

ஆணையத்துக்கு உள்ளேயே இனவாத எதிர்ப்பு செயலகம் மற்றும் ஊனமுற்றோருக்கான உரிமைகள் செயலகம் ஆகிய இரண்டு செயலகங்கள் உருவாக்கப்படும்.

**உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயம்**

புகார்களுக்காக புதிய நடைமுறை ஒன்று நடைமுறைப்படுத்தப்படும்; இதன்படி தீர்ப்பாயத்திடம் நேரடியாக புகார் பதிவு செய்யலாம். புதிய மனித உரிமைகள் சட்டமானது, தீர்ப்பாயம் தகராறுகளை நியாயமாகவும், விரைவாகவும், ஆற்றலுடனும் தீர்ப்பதற்கும், மனித உரிமை மீறல்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கும் ஏற்ப தனது செயல்பாடுகள்மற்றும் நடைமுறைகளை வகுப்பதற்கு உரிய அதிகாரங்கள் கொண்டதாக இருக்கும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டத்தின்படி, பிரச்சினைகளைப் பற்றி விசாரிக்கவும், உண்மைகளைக் கண்டறியவும், சுமுகப் பேச்சுவார்த்தை நடத்தவும் தீர்ப்பாயத்தால் இயலும். இரு தரப்பும் நேரடியாகப் பங்கேற்கிற நடைமுறையில், தீர்ப்பாயம் சாட்சியங்களை பகிரங்கமாகவும் ஒளிவுமறைவின்றியும் மதிப்பிடும். எல்லா சாட்சியங்களும் தன் முன்னால் வைக்கப்பட வேண்டும் என்றும், இரண்டு தரப்பும் குறிப்பிட்ட கால அளவுக்குள் தம்மிடம் இத்தகவல்களை முன்வைக்க வேண்டும் என்றும் உத்தரவிட தீர்ப்பாயத்துக்கு அதிகாரம் உண்டு.

**புதிய மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம்**

உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அமைப்பில் மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம் (Human Rights Legal Support Centre) ஒன்றும் இருக்கும். இது, தீர்ப்பாயத்திடம் நிவாரணம் கோரி வருபவர்களுக்கு தகவல், ஆதரவு, ஆலோசனை, உதவி மற்றும் சட்டப் பிரதிநிதித்துவம் வழங்கும்.

**அடுத்த நடவடிக்கைகள்**

ஆணையம், தீர்ப்பாயம் மற்றும் சட்ட ஆதரவுச் சேவைகளின் புதிய செயல்பாடுகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தல் ஆலோசனைக் குழுவை அட்டர்னி ஜெனரல் அமைச்சகம் உருவாக்கும். இந்தக் குழுவில், ஆணையம், தீர்ப்பாயம், சமூகக் குழுக்கள், தொழிலாளர் மற்றும் வர்த்தக அமைப்பின் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள்.

- 30 -

தொடர்புக்கு:
பிரெண்டன் கிராலி
அட்டர்னி ஜெனரல் அமைச்சகம்
தொலைபேசி: *(416) 326-2210*

www.attorneygeneral.jus.gov.on.ca

இந்த ஆவணம் 14 மொழிகளில் கிடைக்கும்: www.attorneygeneral.jus.gov.on.ca

பொதுவான தொலைபேசி விசாரணைகள்: 416-326-2220 or 1-800-518-7901

பார்வைத்திறன் இழந்தவர்கள் மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண்களை அழைத்து, இந்த ஆவணத்தின் உரையைக் கேட்கலாம்.

TTY: 416-326-4012